# தொழில் துறை
# அறிவிப்புகள் 2017-18

## 1. கும்மிடிப்பூண்டி சிப்காட் ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்காவை ரூபாய் 5.00 கோடி செலவில் மேம்படுத்துதல்

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள சிப்காட் ஏற்றுமதி மேம்பாட்டு தொழிற் பூங்காவிலுள்ள சாலைகள், கழிவுநீர் அமைப்புகள், மழைநீர் வடிகால் மற்றும் ஏனைய பிற வசதிகள் **இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 5.00 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

## 2. சிப்காட் நிறுவன இணையதள போர்டல் ரூபாய் 15.00 இலட்சம் செலவில் மேம்படுத்தும் திட்டம்

சிப்காட் நிறுவனம் அதன் இணையதளத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களோடு, அதன் தொழில் வளாகங்கள் / பூங்காக்களில் ஒதுக்கீடு செய்வதற்காக காலியாக உள்ள மனைகளை, புவிசார் தகவல் அமைப்பு வரைபடங்களின் மூலமாக முதலீட்டாளர்கள் எளிதாக கண்டறியும் வகையில் சிப்காட் நிறுவன இணையதள போர்டல் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 15.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

## 3. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் ரூபாய் 10.00 கோடிக்கான ஆலை மேம்பாட்டுப் பணிகள்

கரூர் மாவட்டம் காகிதபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன ஆலையின் சுற்றுப்புறச் சூழல், பாதுகாப்பு மற்றும் செயல்திறன் மேம்பாட்டு திட்டங்கள் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 10.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## 4. திருப்பூரில் ரூபாய் 2.00 கோடி செலவில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் புதிய கட்டிடம்

திருப்பூர் மாவட்டத்தில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் திருப்பூர் கிளை அலுவலகத்தின் கட்டிடம் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 2.00 கோடி செலவில் கட்டப்படும். இதன் மூலம் திருப்பூர் மாவட்ட ஏற்றுமதி சார்ந்த ஜவுளி தொழிற்துறையின் வளர்ச்சியில் இக்கழகத்தின் பங்களிப்பு மேலும் சிறப்பாக அமையும்.

5. **அரியலூர் சிமெண்ட் ஆலையில் ரூபாய் 1.00 கோடி செலவில் சுண்ணாம்புக்கல் பிரித்தெடுக்கும் ஆலை நிறுவுதல், ரூபாய் 2.00 கோடி செலவில் செயல்திறன் மேம்பாட்டு மற்றும் ரூபாய் 30.00 இலட்சம் செலவில் ஆய்வகம் நவீனப்படுத்தும் திட்டங்கள்**

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையில் புதிதாக தொடங்கப்படவுள்ள ஆண்டொன்றுக்கு 10 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்திதிறன் கொண்ட ஆலைக்குத் தேவைப்படும் கூடுதலான சுண்ணாம்புக்கல் தேவைகளை பூர்த்தி செய்யும்பொருட்டு அரியலூர் சிமெண்ட் ஆலையிலுள்ள ஆனந்தவாடி சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 1.00 கோடி செலவில் சுண்ணாம்புக்கல் பிரித்தெடுக்கும் ஆலை ஒன்று நிறுவப்படும்.

மேலும் அரியலூர் சிமெண்ட் ஆலையில் சூளைகளின் (Kilns) மின் பயனீட்டளவைக் குறைப்பதற்கும் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவற்கும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்**

**ஆணையின்படி** ரூபாய் 2.00 கோடி செலவில் தற்பொழுது இயக்கத்திலுள்ள Pre-Heater Fan-I & II ஆகியவை VFD (Variable Frequency Drive)-வுடன் கூடிய அதிக திறனுள்ள Fan-களாக மாற்றப்படும்.

சிமெண்ட் உபயோகிப்பாளர்களின் பெருகிவரும் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் தரகட்டுப்பாட்டு சோதனைகளை கணிசமான அளவு உயர்த்த உத்தேசித்துள்ளது. இதற்காக அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன ஆலை ஆய்வகம் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 30.00 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்படும்.

## 6. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் ரூபாய் 65.00 இலட்சம் செலவில் செயல்திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் முதன்மை கல் நொறுக்கும் இயந்திரத்தின் (Primary Crusher) செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த புதிய தகடுகள் (Jaw Plates) ரூபாய் 20.00 இலட்சம் செலவில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** மாற்றப்படும்.

ஆலையின் இரண்டாம் நிலை கல் நொறுக்கும் இயந்திரத்தின் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்த புதிய சுழலி அமைப்பு (Rotor Assembly) ஒன்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 20.00 இலட்சம் செலவில் மாற்றப்படும்.

மேலும் ஆலையின் கிலனின் 4 மற்றும் 5–ம் துறைகளில் (Pier) தெற்குப் பகுதியில் 1100 மி.மீ. விட்டம் கொண்ட இரண்டு புதிய தாங்கும் உருளைகள் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 25.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

## 7. விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் ஆலையில் ரூபாய் 57.00 இலட்சம் செலவில் மேம்பாட்டுத் திட்டங்கள்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் விருத்தாசலத்திலுள்ள கற்குழாய் ஆலையின் அரவைத் திறனை மேம்படுத்த தற்பொழுதுள்ள அடித்து உடைக்கும் கருவிக்குப் (Impact Beater Breaker) பதிலாக அதிக அரவைத் திறனுள்ள மூன்று உருளைகளுடன் கூடிய அரவை இயந்திரம் ஒன்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 20.00 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

மேலும், ஆலை வளாகத்திற்கு வெளியே வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அலுவலகக் கட்டிடத்திற்குப் பதிலாக புதிய அலுவலக கட்டிடம் ஒன்று **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 37.00 இலட்சம் செலவில் ஆலை வளாகத்தினுள் கட்டப்படும்.

## 8. அரியலூர் சிமெண்ட் ஆலை குடியிருப்பு மற்றும் சாலைகளை ரூபாய் 1.00 கோடி செலவில் புதுப்பிக்கும் திட்டம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையில் உள்ள 230 தங்கும் குடியிருப்புகள் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** படிப்படியாக புதுப்பிக்கப்படும். இதற்கென 2017–18ம் ஆண்டில் முதல் தவணையாக ரூபாய் 50.00 இலட்சம் செலவிடப்படும். மேலும் குடியிருப்புப் பகுதியின் தோற்றத்தை மேம்படுத்தும் பொருட்டு, குடியிருப்புகளில் உள்ள சாலைகளை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் புதுப்பிக்கும். இதற்கு முதல் தவணையாக ரூபாய் 50.00 இலட்சம் செலவிடப்படும்.

## 9. அரியலூர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலை பணியாளர் செயல்திறனை ரூபாய் 40.00 இலட்சம் செலவில் மேம்படுத்தும் திட்டம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம், அரியலூர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் ஆலைகளில் உள்ள பணியாளர்களின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்குடன் களப்பயிற்சி திட்டம் ஒன்றை **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 40.00 இலட்சம் செலவில் அளிக்கும்.

## 10. உற்பத்தித் திறனை அதிகரிக்க தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூபாய் 85.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் நிறுவுதல்

தமிழ்நாடு கனிம நிறுவனம், கிரானைட் குவாரிகளின் உற்பத்தித்திறனை முறையாகவும், அறிவியல் ரீதியாகவும் அதிகரிக்க **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 85.00 இலட்சம் செலவில் வைரக் கம்பிகளைக் கொண்டு அறுக்கும் அறுவை இயந்திரம் மற்றும் அதைச் சார்ந்த ஐந்து துணைக் கருவிகளை கொள்முதல் செய்யும்.

**11. புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகத்தில் ரூபாய் 24.00 இலட்சம் செலவில் சட்டப் பிரிவு உருவாக்குதல் மற்றும் ரூபாய் 52.08 லட்சம் செலவில் தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு ஆளுமை மையம் அமைத்தல்**

அரசின் வருவாயை பாதுகாக்கவும் கனிம வளங்களை திறம்பட நிர்வகிக்கவும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் தலைமை அலுவலகத்தில் சட்டப்பிரிவு ஆண்டொன்றுக்கு ரூபாய் 24.00 இலட்சம் செலவில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** உருவாக்கப்படும். இதற்கென இத்துறைக்கு துணை இயக்குநர் நிலையில் சட்ட வல்லுநருடன் கண்காணிப்பாளர், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடம் உருவாக்கப்படும்.

மத்திய அரசு திருத்திய சுரங்கங்கள் மற்றும் கனிமம் (மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 1957–ன்படி கணினி வழியாக சில செயல்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சட்டப் பூர்வமாக்கப்பட்டுள்ளது. மேலும் சுரங்கத் துறையின் கனிம

வருவாயை இணையதள ஆன்லைன் பரிவர்த்தனை மூலம் பெற மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் அறிவுரை வழங்கியுள்ளது. எனவே புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** தகவல் தொழில்நுட்ப மற்றும் மின்னணு ஆளுமை மையம் ஒன்று மென்பொறியாளர், கணினி பகுப்பாளர், உதவி இயக்குநர், புவி தொழில்நுட்ப வல்லுநர், உதவி புவியியலாளர், உதவியாளர் மற்றும் தகவல் தொகுப்பாளர் ஆகிய பணியிடங்களுடன் உருவாக்கப்படும். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 52.08 இலட்சம் செலவாகும்.

**12. சென்னை, பெரம்பலூர் மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் புவியியல் மற்றும் சுரங்கத் துறைக்கென ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.25 கோடி செலவில் தனி மாவட்ட அலுவலகம் அமைக்கப்படும்.**

தற்போது சென்னை, பெரம்பலூர் மற்றும் திருவாரூர் மாவட்டம் தவிர்த்து இதர 28 மாவட்டங்களில் புவியியல் மற்றும் சுரங்கத் துறை மாவட்ட அலுவலகங்கள் செயல்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு

மாவட்டங்களும் தனித்தனி மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் இயங்கி வரும் சூழ்நிலையில், கனிமம் மற்றும் சுரங்கத் துறைக்கென தனியாக மாவட்ட அலுவலர் இருக்கும்பட்சத்தில் கனிம நிர்வாகம் தொடர்பான இனங்களில் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள இயலும். இவற்றை கருத்தில் கொண்டு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** சென்னை, பெரம்பலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களுக்கு புவியியல் மற்றும் சுரங்கத் துறைகளுக்கென தனி மாவட்ட அலுவலகங்கள் உருவாக்கப்படும். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1.25 கோடி செலவாகும்.

## 13. மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 66.00 இலட்சம் செலவில் உற்பத்தி மேம்பாட்டுத் திட்டங்கள்

சுப்ரமணிய சிவா கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், நேர இழப்பினைக் குறைக்கும் வகையில், மில் இயக்கி டி.சி. மோட்டாரில் புதிய மின்னணு கட்டுப்பாட்டுக் கருவி ரூபாய் 18.50 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை நிலையத்தின் அரவைப் பணி, உருளைகளில் ஏற்படும் பழுதினால் தடைபடாமல் இருப்பதற்காக, ஒரு புதிய உருளை, அரவை இயந்திரப்

பகுதியில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 23.20 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில், சுண்டு கலன் நிலையத்தின் (Evaporator Station) திறனை மேம்படுத்தும் வகையில், 4–வது சுண்டு கலனின் கலண்ட்ரியா (CALENDRIA) **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** ரூபாய் 24.50 இலட்சம் செலவில் மாற்றப்படும்.

## 14. செயற்கை மணல் உற்பத்தி நடைமுறைகளை எளிமையாக்கி ஊக்குவித்தல்

ஆற்று மணல் இருப்பு குறைந்து வருவதாலும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாலும் செயற்கை மணல் (M-Sand) உற்பத்தியை ஊக்குவித்தல் அவசியமாகிறது. செயற்கை மணலை தயாரிக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி** செயற்கை மணல் உற்பத்தி செய்யும் ஆலைகளை நிறுவ, உரிமம் வழங்கும் நடைமுறைகளை எளிமைப்படுத்தி, முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.